ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# அகநானூறு வெளிப்படுத்தும் களவொழுக்கத்தில் ரஸங்கள்

**ரெனி.சி.பால்[1]& முனைவர் லட்சுமி ராமசாமி[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர், [2]ஆய்வு நெறியாளர்**

**இசை மற்றும் நுண்கலைத் துறை**

**வேல்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் சைன்ஸ் அண்ட் டெக்னாலஜி (VISTAS) சென்னை.**

**ஆய்வு நோக்கம்**

சங்க இலக்கியங்களுள் ஒன்றான அகநானுற்றில் வெளிப்படும் களவு ஒழுக்கத்தை ஆதாரமாக கொண்டு தலைவன் தலைவி இருவரின் உணர்வுகளை, தொல்காப்பிய மெய்ப்பாடுகளையும் பரதநாட்டிய ரஸங்களையும் கொண்டு ஆராய்வதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு சுருக்கம்**

களவு பொழுதில் தலைவனும் தலைவியும் சந்திக்க முற்படும் போது ஏற்படும் உணர்வுகளை, தொல்காப்பிய மெய்ப்பாடுகளில் எவ்வாறு உணரப்பட்டுள்ளது என்பதையும் பரதநாட்டிய ரஸங்களில் எவ்வாறு உணரப்பட்டுள்ளது என்பதையும் இவ்வாய்வு கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**தலைப்பு அறிமுகம்**

சங்க காலத்தில் தலைவனும் தலைவியும் சந்திக்கும் சூழலில் ஏற்படும் இடையூறுகளில் வெளிப்படும் உணர்வுகளை, தொல்காப்பிய மெய்ப்பாடுடனும் பரதநாட்டிய ரஸங்களுடனும் ஒப்பிடும் வகையில் “அகநானூறு வெளிப்படுத்தும் களவொழுக்கத்தில் ரஸங்கள்” என்ற தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**களவொழுக்கம் விளக்கம்**

சங்க காலத்தில் திருமணத்திற்கு முன்பு தங்கள் பெற்றோர் அறியாமல் தலைவனும் தலைவியும் சந்தித்து காதல் கொள்ளும் பொழுதினை குறிப்பிடுவதே களவொழுக்கம் ஆகும்.

**முன்னுரை**

மனிதனின் அகவுணர்வை வெளிப்படுத்தும் சங்க இலக்கியங்களுள் அகநானூறு, தலைவன் தலைவியினது உள்ளுணர்வைப் பற்றிய தெளிவான தகவல்களை அளிக்கின்றது. களவொழுக்கத்தில் தலைவனது சந்திப்பு பகற்குறி, இரவுக்குறி என்னும் இரு பொழுதிலும் நிகழ்கின்றது. தலைவன் இரவுக்குறியின் போது தலைவியை சந்திக்க வரும் பாதையைக் குறித்த அச்சம் தலைவிக்கு உண்டாக்குகின்றது. பகற்பொழுதில் சந்திக்க முற்படும் போது தலைவியினது பெற்றோர், ஊர் மக்கள் அனைவருக்கும் தெரிந்துவிடும் என்ற கவலையை உண்டாக்கின்றது. அதனால் களவு தொடர வழியில்லாமல் வரைவு என்னும் திருமண பந்தத்தில் ஒன்று சேர விரும்புவர்.

தலைவனும் தலைவியும் காதல் வாழ்க்கையில் இருந்து விரைவில் திருமண பந்தத்தில் இணைந்து வாழ்க்கை நடத்த களவொழுக்கமானது கற்பு நிலை வாழ்க்கைக்கு வழி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான களவுவொழுக்க வாழ்க்கை முறையில் வெளிப்படும் தலைவன், தலைவி உணர்வுகளை தொல்காப்பிய மெய்ப்பாடுடனும், பரதநாட்டிய ரஸங்களுடனும் ஒப்பிட்டு பார்க்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**தித்தனின் புறங்காட்டைப் போல நம் களவு விளங்குகின்றது !**

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் கூறியது. தோழி சொல்லெடுப்பத் தலைமகள் கூறியதும் ஆகும்.

**"இரும்பிழி மகாஅர் இவ் அழுங்கல் மூதூர்**

**...................................................................**

**பல்முட்டின்றால் தோழி! நம் களவே”. (அகம்122)**
**புலவர்- பரணர்.**

**பொருள்**

தன்னைக் காண வராதத் தலைவியின் எண்ணத்தை அறிய, தலைவன் யாரும் அறியாத வண்ணம் மறைவிடத்தில் மறைந்துக் கொண்டிருப்பதை அறிந்த தலைவி, அவன் கேட்கும்படி தான் தலைவனைக் காண இயலாத காரணத்தை தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**தலைவிக்கு ஏற்படும் இடையூறுகள்**

தலைவி தன்னை சந்திக்க காத்திருக்கும் தலைவனைக் காண புறப்படும் போது, அவள் ஊரில் வாழும் மக்கள் இரவுப் பொழுது நெருங்கியும் உறங்காமல் விழாக் காலம் போலவும் மழைப் பொழிவது போலவும் மிகுந்த ஆரவாரத்துடன் பேசிக் கொண்டு இருந்தனர். சில நள்ளிரவு பொழுதுகள் கழிந்து, இம்மக்களும் இவ்வூரின் வளமையுடைய கடைதெருக்களும் மற்றத் தெருக்களும் உறங்கி அடங்கிய போதும் தலைவியை வெளியே செல்ல அனுமதிக்காமல் மிகுந்த சத்தத்துடன் வசைப்பாடி கொண்டிருக்கும் அவள் தாய் என்றொறு நாளேனும் உறங்கினாலும், அவ்வூரை காவல் காத்திருக்கும் தூங்காத இமைகள் கொண்டிருக்கும் வேலினை, கையில் ஏந்திய ஊர்க்காவலர்களின் விழிகள் அயர்ந்தாலும், கூர்மையான பற்களையும் வலமாக சுருளும் வாலினைக் கொண்டிருக்கும் நாய்கள் உரக்க குரைத்துக் கொண்டிருக்கும். இவைகளும் அமைதியுடன் உறங்கினாலும், பகல் பொழுது போல் நிலவும் தன் வெண்மையான ஒளிக் கதிர்களை நிலமெங்கும் ஒளிர செய்யும். அத்திங்களும் மேற்கு திசையை அடைந்து இருள் எங்கும் சூழ்ந்திருக்கும் நள்ளிரவில், வீட்டில் உள்ள எலிகளை வேட்டையாடி உணவாக உட்கொள்ளும் பொந்தில் வாழும் ஆந்தையின் குழறும் ஒலி சற்று அடங்கினாலும் வீட்டில் உள்ள கோழிச்சேவலும் தன் ஒலியை எழுப்பி உறங்கும். இவைகள் அனைத்தும் என்றொரு நாளாவது உறங்கியதும் தலைவி இவ்விடையூறுகளை எல்லாம் கடந்து தலைவனை சந்திக்க வரும் போது, அங்கு

நிலையில்லாத மனம் கொண்ட தலைவனை காண இயலாது என்று தோழியிடம் கூறுகிறாள் தலைவி.

**தலைவியின் வருத்தம்**

தலைவி பல தடைகளைக் கடந்து சென்றும் தலைவனை காண இயலாததால் அவளின் மன நிலை பரற்கற்கள் நிறைந்த பாதையில் சதங்ககைகள் அணிந்து ஆதிக் கதியில் ஆர்ப்பரித்துக் கொண்டு அதிவேகத்தில் செல்லக்கூடிய குதிரைப் படைகளைக் கொண்டுள்ள பல கொடைத் தன்மையுடைய சோழ மன்னன் தித்தனின் தலைநகரம், நொச்சிவேலியுடைய உறையூரின் புறங்காட்டின் பாதைகள், பகைவருக்கு எவ்வாறு மிகுந்த துன்பத்தை ஏற்படுத்துமோ, அவ்வாறே என் மனமும் துன்பத்தை அடைகிறது என்று தோழியிடம் கூறுகிறாள்.

**மெய்ப்பாடுகள்**

தலைவிக்கு ஏற்படும் இடையூறுகளை தோழியிடம் கூறுமிடத்தில் **அழுகை** என்னும் மெய்ப்பாடும், அதன் களன்களுள் ஒன்றான **அசைவு** என்னும் மெய்ப்பாடும் வெளிபடுகின்றது. அதிகக் குதிரைப் படைகள் கொண்ட மன்னனான தித்தனைப் பற்றி கூறுமிடத்தில் **பெருமிதம்** என்னும் மெய்ப்பாடும், அதன் களன்களுள் ஒன்றான **கொடை** என்னும் மெய்ப்பாடும் தோன்றுகின்றது. இதனுடன் துணை மெய்ப்பாடுகளான **கருதல், இடுக்கண், வியர்த்தல்** போன்ற மெய்ப்பாடுகளும் காணப்படுகின்றது.

**ரஸா அனுபவங்கள்**

இப்பாடலில் இடம்பெற்றுள்ள கதாப்பாத்திரங்கள் தலைவி, தலைவன், தோழி ஆகியோர் ஆவர். இதுவே ஆலம்பன விபாவமாகும். இப்பாடலில் பாவம் தோன்ற காரணமாய் விளங்குகின்ற இரவுப்பொழுது, கடைத்தெரு, வேல், ஊர்க் காவலர்கள், நாய், திங்கள், எலி, ஆந்தை, கோழி, சேவலாகியவை உத்தீபன விபாவங்களாகும். இப்பாடலில் சிருங்கார ரஸத்தை அடிப்படையாகக் கொண்டு கருணை ரஸம் மற்றும் அற்புத ரஸமானது தோன்றுகின்றது. உத்ஸாஹம், ஆசை, சிந்தை ஆகியவை சிருங்கார ரஸத்திற்கான அனுபாவங்களாகும். கண்ணீர் விடுதல், பெருமூச்சு விடுதல், அழுதல், பிரமை, சிந்தை, ஸ்மரனை ஆகியவை கருணை ரஸத்தின் அனுபாவங்களாகும். தைர்யம், முகம் மலர்தல் ஆகியவை அற்புத ரஸத்தின் அனுபாவங்களாகும். தைன்யம், சிந்தை, சபதம், ஆவேதம், வருத்தம், ஔத்சுக்யம், அவஹித்தம், விதர்கம் ஆகிய வியபிச்சாரி பாவங்கள் உணரப்பட்டுள்ளது. ஸ்வேதம், வேபது, அஸ்ரம் என்னும் சாத்விக பாவங்களும் இப்பாடலில் உணரப்பட்டுள்ளது. இப்பாடலில் தோன்றியுள்ள ரஸங்களுக்கு ரதி ஸ்தாயி பாவமாக அமைந்துள்ளது.

**பாடலின்தனிச்சிறப்பு**

இப்பாடலில் குறிப்பிட்டுள்ள குதிரைகளின் ஓட்டத்தின் கால அளவு (ஆதி கதி) தற்போது வழக்கத்தில் கையாளப்படும் தாள வகைகளுள் ஒன்றான சதுஸ்ர நடையான

தகதிமி என்ற கால அளவை ஒத்ததாகும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடலில் கூறப்பட்டுள்ள குதிரையின் ஓட்டத்தை குறிக்கும் ஆதிக்கதி, தற்போது பரத நாட்டிய வடிவமைப்பில் குதிரையின் ஓட்டத்தை அபிநயிக்கும் போது கையாளப்பட்டு வருகிறது.

**முடிவுரை**

பண்டைய தமிழ் மக்களினது உறவுகளில் ஏற்படும் உணர்வுகளை சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்று பாடல்கள் உணர்த்துகின்றது. அகநானூற்று குறிஞ்சித் திணைப் பாடல்களில் காணப்படும் தலைவன் மற்றும் தலைவியின் உறவானது திருமணத்திற்கு முன்பு நிகழும் சந்திப்பினை குறிக்கின்றது. தலைவனும் தலைவியும் யாரும் அறியாமல் சந்தித்து காதல் கொள்வது களவொழுக்கமாகும். களவுவொழுக்க வாழ்க்கை முறையில் வெளிப்படும் தலைவன், தலைவி உணர்வுகளை பரதநாட்டிய ரஸங்களுடன் ஒப்பிடலாம் என்பதை இக்கட்டுரை மூலம் அறியப்படுகிறது.

**துணை நூல்பட்டியல்**


- பத்மாசுப்பிரமணியம்,பரதக்கலைகோட்பாடு,வானதி பதிப்பகம்,சென்னை, ப 143,144.
- அ.மாணிக்கனார்,அகநானூறு மூலமும் உரையும்,வர்த்தமானன் பதிப்பகம்,சென்னை, ப 8,9.
- முனைவர் லட்சுமிராமசுவாமி,இந்திய பாரம்பரியத்தில் சுவை,ஸ்ரீமுத்ராலயா பதிப்பகம், சென்னை, ப 102,103.
- நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கரந்தைக் கவியரசு ரா.வேங்கடாசலம் பிள்ளை, அகநானூறு,மணிமிடை பவளம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,சென்னை, ப 10.